**தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி திணைக்கள தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 291.80 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 184.39 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 107.41 மில்லியன் அதாவது 36.81 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 182.70 | 175.93 | 6.77 | 3.71 |
| மூலதனம் | 109.10 | 8.46 | 100.64 | 92.25 |
| மொத்தம் | 291.80 | 184.39 | 107.41 | 36.81 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 31101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.00 | 11.57 | 7.00 | 8.13 | 60.00 | 33.96 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 6000/0000/00/0018/0020/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 4.13 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | சேதம் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iv) | பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப குழவினதும் வருகைப் பதிவேடு | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

03 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களில் 25 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது.

#### 3.2.2 ஏனைய அமைச்சினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளைப் பயன்பாடு

வெவ்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சினால் ரூபா 62.06 மில்லியனான நிதிஏற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 6.07 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 55.99 மில்லியனான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

ஏனைய தரப்பினரால் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 4.11 மில்லியன் பணம் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

31101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.29 ஆக இருந்ததுடன், அந்நிலுவை கடன் மீதிகளில் ரூபா 987,278 தொகை 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்றில் தனியாள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 157,273 இற்குரிய 07 கடன் மீதிகளின் கோவைகள் காணாமல் போயிருந்தன.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

திணைக்களத்தினால் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

அரச பெறுகைகள் வழிகாட்டல்கள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 9.1 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த செயலாற்றுகை திட்டம்**

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமனறத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2014 பெப்ரவரி 26 ஆந் திகதி திணைக்களத்திற்குச் சொந்தமான மோட்டார் வண்டியொன்று விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்கள வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ் வாகனம் காப்புறுதி செய்யப்படாமல் இருந்தமையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக காப்புறுதி இழப்பீட்டையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. விபத்தின் பின்னர் நிறுவன வளவில் காணப்பட்ட அவ் வண்டியின் கெசட் இயந்திரம் மற்றும் சாரதி இருக்கை காணாமல் போயிருந்தாக உரிய கோவையைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்ட போதிலும், அந்நட்டங்கள் மற்றும் தேசங்கள் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டாதிருந்ததுடன் திணைக்களத்தின் சேதங்கள் பதிவேட்டிலும் இது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க பொது முயற்சிய சுற்றறிக்கையின் 3.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் பற்றாக்குறை, மிகைகள், அழிக்கப்பட வேண்டிய பொருட்கள், திருத்தம் செய்யப்பட வேண்டிய பொருட்கள், விற்பனை செய்யப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 உள்நாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.**

2016 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் லோலுகஸ்வெவ செயற்திட்டத்திற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 20 மில்லியன் ஆன கட்டுநிதி திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்பாடு எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்படாமை மற்றும் செயற்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தமையால் அச் செயற்திட்டத்திற்குரிய எந்தவொரு செயற்பாடொன்றும் மீளாய்வாண்டிலும் நிறைவேற்ற முடியாமையால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

**3.8 செயலாற்றல்**

தேசிய பௌதீக வடிவமைப்பு கொள்கையொன்றை தயாரித்தல், தேசிய பௌதீக வடிவமைப்பு திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் பௌதீக செயற்திட்டத்தை செயற்படுத்துதல் ஒழுங்குபடுத்துதல் என்பன இத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதும் அத்திட்டத்தின் பிரகாரம் சனசமூக அபிவிருத்தி நடவடிக்கைகளாக தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு திட்டங்களின் செயற்பாடு தொடர்பாக ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 51 | 12 | 39 |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 01 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 115 | 79 | 36 |
| (iv) | ஆரம்ப நிலை | 213 | 188 | 25 |
| | **மொத்தம்** | **387** | **280** | **107** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தில் 36 இரண்டாம் தர உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக காணப்பட்ட போதும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திணைக்களத்தின் 4 உத்தியோகத்தர்கள் வேறுதரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.